# பாம்புக் கடியைத் தடுத்தலும் அவற்றுக்கான முதலுதவியும்

## பாம்பு-கடியைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள்

- வீட்டிலும், வீட்டைச் சுற்றிலும் இருட்டான பகுதிகளையும், களஞ்சியமாக விளங்கும் இடங்களையும் அடிக்கடி சுத்தப்படுத்துங்கள்.
- இரவில் நடந்து செல்லும் போது சக்திமிக்க 'டோர்ச்' ஒன்றைக் கொண்டு செல்லுங்கள்.
- இரவில் நடந்து செல்லும் போது, கணுக்கால் வரையில் முழுப் பாதத்தை மூடும் சப்பாத்துக்களைப் போடுவதுடன், கணுக்கால் நீளம் வரையிலான ஆடைகளையும் அணியுங்கள்.
- நிலத்தில் படுப்பதாக இருந்தால், சூழவுள்ள பகுதியைக் கவனமாக ஆராய்ந்து பாருங்கள்.
- அடர்த்தியாக தாவரங்கள் வளர்ந்துள்ள பகுதி ஊடாக நடக்கும் போது, முன்னால் உள்ள நிலத்தைத் தட்டிப்பார்ப்பதற்காக நீண்ட தடியொன்றைக் கொண்டு செல்லுங்கள். இலகுவில் அடையாளம் காணப்பட முடியாத விதத்தில் பாதையின் குறுக்கேயுள்ள ஏதாவதை அப்புறப்படுத்துவதற்கு தடியைப் பயன்படுத்துங்கள்.
- பாம்பொன்றை இலகுவாக அடையாளங் காண முடியாவிட்டால், நீண்ட தடியொன்றைப் பயன்படுத்தி சாத்தியமென்றால் பாம்பைத் தூக்கி அகற்றிவிடுங்கள்.
- பாம்புகள் அனேகமாக குவிந்து கிடக்கும் இலை குலைகளிலான குப்பையில் சுருண்டு கிடக்கும். எனவே, வீட்டைச் சுற்றி இலை மற்றும் குப்பைக் கூளங்களை அகற்றுவதற்கு நீண்ட தடியைப் பயன்படுத்துங்கள்.
- கொறி விலங்குகளையும், வேறு சிறிய விலங்குகளையும் பாம்புகள் இரையாகக் கொள்வதனால், இத்தகைய விலங்குகள் வளர்வதையும், அவை வீட்டுக்குள் பிரவேசிப்பதையும் தடுங்கள்.
- இலங்கையில் உள்ள விஷமுள்ள பாம்புகளையும், விஷமற்ற பாம்புகளையும் பற்றி தெளிவான புரிந்துணர்வொன்றை ஈட்டிக்கொள்ளுங்கள்.



பாம்பொன்று கடிக்கும் தருணத்தில், வைத்தியசாலைக்கு நோயாளியுடன் உயிரான பாம்பைக் கொண்டு செல்வது அவசியமில்லை. இது முயற்சிக்கப்பட்டால், பாம்புக் கடிக்கு அதிகளவு பேர் பாதிக்கப்படுவதைத் தடுக்குமுகமாக அதிகளவு கவனம் எடுக்கப்பட வேண்டும்.



## பாம்புக்கடிக்கு முதலுதவி

கீழே சுருக்கமாக வருணிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பின்பற்றி, பாம்புக் கடியிலிருந்து மரண ஆபத்தை தடுப்பதற்கு உங்களால் உதவ முடியும்:

- பாம்பு கடித்தவுடன், அச்சத்தினால் நோயாளி ஒருவர் உடனடியாக அதிர்ச்சியடைந்து விடுகின்றார். நோயாளி அமைதியாக வைத்திருப்பதன் மூலம், அவரது உடல் ஊடாக விஷம் பரவுவதை தாமதமாக்க முடியும்
- நோயாளி தொடர்ந்து அசையாமல் இருப்பதை உறுதிப்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். கையொன்றின் அல்லது காலொன்றின் ஊடாக உடலினுள் விஷம் பிரவேசித்திருந்தால், அந்த அவயத்தை அசையாமல் வைத்திருங்கள்.
- விஷத்தின் சுவடுகளை அகற்றுவதற்காக கடிபட்ட மேற்பரப்பை நீரையும், சவர்க்காரத்தையும் கொண்டு மிருதுவாகக் கழுவ வேண்டும்.
- வீக்கத்தை விஷம் விளைவிக்கலாம் என்பதனால், மோதிரங்கள், கைச்சங்கிலிகள் மற்றும் வேறு இறுக்குகின்ற அணிகலன்கள் போன்றவற்றை அகற்றுங்கள்.

## பாம்புக் கடியொன்றின் பின்னர் உடனடியாக எதைச் செய்யக்கூடாது?

- இரத்த ஓட்டத்தை நிறுத்துவதற்காக கடிபட்ட இடத்தைச் சுற்றி துணித்துண்டுகளினால் அல்லது இதையொத்த பொருளினால் கட்டக்கூடாது.
- நோயாளிக்கு அஸ்பிரினை அல்லது அஸ்பிரின் அடங்கிய மருந்தைக் கொடுக்கக்கூடாது. ஏனெனில் இது இரத்தத்தை பாதித்து, இரத்தம் உறைந்து போதலைத் தடுக்கின்றது.
- பாம்புக் கடியினால் பாதிக்கப்பட்டவருக்கு இளநீர், மற்றும் மூலிகை மருந்து போன்ற பொட்டாசியத்தைக் கொண்ட குடிபானங்களை வழங்க வேண்டாம்.
- நோயாளிக்கு மதுசாரம் அல்லது மதுசாரம் கலந்த பதார்த்தங்களை கொடுக்க வேண்டாம்.
- விஷத்தை அகற்றுவதற்காக கடியினால் ஏற்பட்ட காயத்தை வெட்ட முயற்சிக்க வேண்டாம்.
- கடியினால் ஏற்பட்ட காயத்தின் ஊடாக விஷத்தை உறிஞ்சுவதற்கு முயற்சிக்க வேண்டாம்.
- வீட்டுப் பரிகாரங்களை அல்லது வேறு குடித்தன மருந்துகளைப் பிரயோகிக்க வேண்டாம்.













**இலங்கையில் மரணத்தை ஏற்படுத்தும் விஷத்தன்மையிலான பாம்புகளுக்கு விஷ எதிர்ப்பு சிகிச்சைகள் வைத்தியசாலைகளில் கிட்டுகின்றன. எனவே, மருத்துவச் சிகிச்சைக்காக அண்மையில் உள்ள வைத்தியசாலைக்கு பாம்பினால் கடியால் பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக எடுத்துச் செல்ல வேண்டும்.**

Environmental Foundation
WWF
American Red Cross
Sri Lanka Red Cross Society

வெளியீட்டோர்: சூழல் மன்றம் மற்றும் வனவாழ்வுப் பேணல் சங்கம் - காலி
வடிவமைப்பு: கே. அமில தரங்க

அச்சீடு: கருணாரட்ன அன்ட் சன்ஸ் லிமிடட்